# இஸ்லாத்தின் பார்வையில் பலதாரமணம்

## POLYGAMY IN ISLAMIC PERSPECTIVE

Dr. U.L.M. Aslam
*Teacher, Ak/Addalaichenai M.M.V (National School)*
ulm.aslam@gmail.com

**Summary**

*Polygamy means "when a man legally has more than one wife at the same time." The claim that Islam introduced polygamy is inaccurate in world history. Instead, Islam regulated and controlled the practice of polygamy, which existed before. For example, Kailan ibn Salama had ten wives before Islam. Upon embracing Islam, the Prophet (peace be upon him) asked all but four of them to divorce. In Islamic jurisprudence, a second marriage is not obligatory but permissible. Fair treatment between wives is a primary requirement for polygamy. Islamic scholars also emphasize the importance of being able to meet the emotional and physical needs of each wife and having the economic resources to support them as significant qualifications for polygamy.*

### 1. அறிமுகம்

பலதார மணம் என்பது "ஓர் ஆண் ஏக காலத்தில் சட்டரீதியாக ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மனைவிகளாக வைத்திருப்பதாகும்". உலக வரலாற்றில் ஓர் ஆண் பல பெண்களை மணந்திருந்ததையும், ஒரே பெண்ணை பல ஆண்கள் மணந்திருந்ததையும் காணமுடிகின்றது.

### 1.1. இஸ்லாமிய அனுமதி

இஸ்லாம் மனிதனது இயல்புக்கும் அவனது கண்ணியத்திற்கும் ஏற்ற பொருத்தமான வாழ்க்கை வழிமுறையை அறிமுகம் செய்துள்ளது என்றவகையில் ஒரே பெண்ணை பல ஆண்கள் மணந்துகொள்வதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் தேவையேற்படும் போது ஓர் ஆண் ஏக காலத்தில் சட்டரீதியாக நான்கு பெண்களை மனைவிகளாக வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இது பற்றி அல்-குர் ஆன் பின்வருமாறு கூறுகிறது:

> ''அநாதை(ப் பெண்களை மணந்துகொண்டு அவர்)கள் விஷயத்தில் நீதி செலுத்த இயலாது என நீங்கள் அஞ்சினால், உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நான்கு நான்காக நீங்கள் மணமுடித்துக்கொள்ளலாம். ஆனால், (அவர்களிடையே) நீதியோடு நடந்திட முடியாது என்று நீங்கள் அஞ்சுவீர்களாயின் ஒரு பெண்ணை மட்டும் மணமுடித்துக் கொள்ளுங்கள் அல்லது உங்கள் கரங்கள்

சொந்தமாக்கிக்கொண்ட பெண்ணையே மனைவியாக்கிக்கொள்ளுங்கள். நீதி தவறாமலிருப்பதற்கு இதுவே ஏற்றதாகும்'' (அந்நிஸா:3)

### *1.2. பலதாரமண அறிமுகம்*

திருமணம் பற்றிய இஸ்லாமிய அடிப்படைக் கொள்கை பலதாரமணமுமல்ல, இஸ்லாம் அதை அறிமுகப்படுத்தவுமில்லை, மாறாக அதை கட்டுப்படுத்தியுள்ளது என்பதுதான் யதார்தம். ஏனெனில் இஸ்லாத்திற்கு முற்பட்ட காலத்தில் ஒரு ஆண் வரையறையின்றி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் தடையின்றி எத்தனை பெண்களை வேண்டுமானாலும் திருமணம் செய்து கொள்ளும் வழக்கம் காணப்பட்டது, இதை இஸ்லாம் நான்காக கட்டுப்படுத்தியுள்ளது.

கைலான் இப்னு ஸலமா எனும் நபித்தோழர் இஸ்லாத்தில் இணைந்த போது, அவருக்குப் பத்து மனைவியர் இருந்தனர். அவர்களும் அவருடன் இஸ்லாத்தில் இணைந்தனர். அவர்களில் (விரும்பிய) நான்குபேரை மட்டும் தேர்வு செய்து கொள்ளுமாறும் மற்றவர்களைத் தலாக் செய்துவிடுமாறும் இறைத்தூதர் (ஸல்) கட்டளையிட்டார்கள். (அஹ்மத், திர்மிதி)

### *2. பலதாரமணம் (வாஜிபா) கட்டாயமானதா?*

ஒரு பெண்ணை மணந்திருப்பவர் இரண்டாவதாக மற்றுமொரு பெண்ணை மணப்பது அவசியம் என்று அல் - குர்ஆனிலோ சுன்னாவிலோ குறிப்பிடப்படவில்லை. பலதாரமணத்தில் சில நன்மைகள் இருப்பதனால், அவசியம் ஏற்படும் போது இஸ்லாம் அதற்கு அனுமதி வழங்கியுள்ளது. இதனால் தான் இஸ்லாமிய அறிஞர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்: மனைவியரின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் அநீதி ஏற்படும் என்ற அச்சம் ஏற்படும் போது, ஒரு மனைவியுடன் மட்டுப்படுத்தப்படுவது விரும்பத்தக்கது.

தற்காலத்தில் காணப்படுகின்ற சில பலதாரமணங்கள் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இழைக்கப்படுகின்ற அநீதிக்கான ஆதாரமாக காணப்படுகின்றது என்பதனை மறுப்பதற்கும் இல்லை. இது குர்ஆன் மற்றும் சுன்னாவைப் பற்றிய சரியான புரிதல்கள் இல்லாததனாலும் திருமணம் பற்றிய அல்குர்ஆன் வசனத்தை முழுமையாக படிக்காததனாலும் ஏற்படுகின்ற தவறுகளாகும்.

''உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நான்கு நான்காக நீங்கள் மணமுடித்துக்கொள்ளலாம்''

என்ற வசனத்தை பார்ப்பவர்கள் இந்த வசனத்திற்கு முன்னுள்ள விடயங்களிலும் பின்னுள்ள விடயங்களிலும் தெளிவான கருத்துக் கொள்ள வேண்டும். அவற்றை தெளிவாக விளங்காத போது இஸ்லாம் கூறும் பலதாரமணக் கொள்கையை சரியாக நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விடும்.

## 3. நிபந்தனைகள்

ஒரு முஸ்லிம் தனது முதல் மனைவிக்குப் பிறகு இரண்டாவது, மூன்றாவது அல்லது நான்காவது மனைவியை திருமணம் செய்து கொள்வதென்பது உண்மையில் அவனுக்கு வழங்கப்பட்டுள்ள சுதந்திரமா? அல்லது அந்த சுதந்திரம் நிபந்தனைகளால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா? என்பதை தெளிவாக விளங்க முற்பட வேண்டும்.

''இஸ்லாம் கூறும் பலதாரமணக் கொள்கை நீதியின் நிபந்தனைக்குட்பட்டது, நீதி இல்லை என்றால், பலதார மணம் தடைசெய்யப்பட்டுள்ளது'' ஒரு நபர் இரண்டாவது மனைவியை திருமணம் செய்து கொண்ட பின் அவர் நியாயமானவராக இருந்தால், அத்திருமண வாழ்க்கையைத் தொடர்கிறார், நியாயமற்றவராக இருந்தால், விவாகரத்துச் செய்கிறார் என்ற அர்த்தத்தில் நீதியை பரிசோதிக்க விடமுடியாது. ஏனெனில் இஸ்லாமிய பலதாரமணம் என்பது தடைசெய்யப்பட்ட உரிமை என்று பொருள், நியாயமற்ற பயத்தால் பலதாரமணம் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதனை அல்-குர்ஆன் இப்படிக் கூறுகிறது: *''ஆனால், (அவர்களிடையே) நீங்கள் நியாயமாக இருக்க மாட்டீர்கள் என்று பயந்தால், ஒரு பெண்ணை மட்டும் மணமுடித்துக் கொள்ளுங்கள்''*

தான் மணம் புரியும் பெண்களின் உணர்வுகளையும் உடலியல் தேவைகளையும் நிறைவு செய்யும் சக்தியும் பராமரிப்புச் செலவு கொடுப்பதற்கு வேண்டிய பொருளாதார வளம் என்பன பலதார மணம் புரிவதற்கு இருக்க வேண்டிய முக்கிய தகைமைகளாகும். உணவு உடை வீட்டு வசதியென வாழ்வாதாரங்கள் மனைவியருக்கு வழங்க வேண்டும்.
மனைவியருக்கிடையே பாரபட்சமாக நடந்து கொள்வது பற்றி எச்சரிக்கும் இஸ்லாமியப் போதனைகள் காணப்படுகின்றன.

> ''நீங்கள் மிகக் கவனமாக இருந்தாலும் பெண்களிடையே நீதி செலுத்துதல் என்பது உங்களால் முடியாததாகும். எனவே (ஒருவர் பக்கம்) முற்றிலும் சாய்ந்து விடாதீர்கள்.'' (அந்நிஸா: 129)

> ''ஒருவருக்கு இரு மனைவியர்கள் இருந்து அவர்களில் ஒருவர் பக்கம் அடுத்தவருக்கு அநீதி இழைக்கும் வகையில் சாய்ந்தால் மறுமை நாளில் தன் உடம்பின் ஒருபக்கம் வீழ்ந்தவராக அல்லது சாய்ந்தவராக அதனை இழுத்துக் கொண்டு வருவார்.'' (திர்மிதி நஸாஈ)

இங்கு ஒருவர் பக்கம் சாய்தல் என்பதன் பொருள் உரிமைகளைப் பூரணமாகக் கொடுக்காது அநீதி இழைத்தலாகும். உளரீதியிலான அன்பை நபி (ஸல்) அவர்கள் இதன் மூலம் குறிக்கவில்லை. ஏனெனில் அன்பு செலுத்துவதிலும் நீதியாக இருப்பது மனிதனால் சாத்தியப்படாத ஒன்றாகும். அதனையே மேலே குறித்த குர்ஆன் வசனமும் கூறுகின்றது. எனவே அல்லாஹ் அதனை மன்னித்து விடலாம்.

எனவேதான் நபி (ஸல்) அவர்கள் பொருட்களைப் பகிர்ந்து கொடுக்கும் போது மிகவும் நீதியாகப் பங்கிட்டுக் கொடுப்பார்கள். பின்னர் கீழ்வருமாறு கூறுவார்கள் “இறைவா எனது சக்திக்கு ஏற்ற முறையில் நான் பிரித்துக் கொடுக்கக் கூடியது இதுவே உனது சக்திக்கு உட்பட்ட என்னால் முடியாதவற்றில் என்னைக் குற்றம் பிடிக்காதே.”(திர்மிதி நஸாஈ). என்னால் முடியாதது என நபி(ஸல்) அவர்கள் கருதியது உளரீதியான அன்பையே. ஆகவே பலதார மணம் முடிப்போர் பராமரிப்புச் செலவு அன்பளிப்பு வழங்கல் தங்குவதற்கான காலம் ஒதுக்குதல் பிரயாணங்கள் மேற்கொள்ளல் போன்றவற்றில் மனைவியரிடத்தே நீதியாக நடத்தல் வேண்டும்.